தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 11, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021,

1990 ஏப்ரல் 24, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில், காலை 9-00 மணியளவில், பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் ''.

மலைபோல உயர்ந்த நிலையில் உள்ளவரும், ஒன்றுபட்டு இயங்காமல், அழிவுக்குக் காரணமான செயல்களை, ஒரு குன்றிமணியளவு செய்தாலும், அழிந்து போய் விடுவர்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

கல் மெருகூட்டும் தொழிற்சாலை.

* *4366*—திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டு தாலுகா, புலிக்குன்றம் கிராமப் பகுதியில் எடுக்கப்படும் கல்லைக் கொண்டு பாலிஷிங் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கான தனியான திட்டம் ஏதும் தேவையில்லை. ஏற்கனவே அரசுத் துறையில் இந்த மாவட்டத்தில் 100 விழுக்காடு ஏற்றுமதிக்கேற்ற மெருகூட்டும் தொழிற்சாலை மணலியில் 1986-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு வட்டத்தில், செங்கல்பட்டு தொகுதி என்பது, மிகவும் பின்தங்கிய தொகுதி. செங்கற்பட்டு வட்டத்தில் இரண்டு தொகுதிகள் இருக்கின்றன. அதிலே, செங்கற்பட்டுத் தொகுதியில் இதுவரையில் எந்தவிதமான ஒரு தொழிற்சாலையும் அரசாலோ, தனி நபராலோ ஆரம்பிக்கப்படவில்லை. இங்கே மிக அருமையான கற்கள் கிடைப்பதால், ஒரு மெருகூட்டும் தொழிற்சாலை ஏற்படுத்தினால், அந்தக் கற்களை மெருகூட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், அதிக அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற நிலை ஏற்படும். அந்த வகையிலே, அங்கே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டம், சம்புவராயர், வட ஆற்காடு அம்பேத்கார், தென்னாற்காடு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில், இந்தக் கல்லைக் கொண்டு போய் ஏற்றுமதி செய்வதற்கு, மெருகூட்டுகின்ற பணிகள் பல இடங்களில் நடைபெறுகின்றன. குறிப்பாக, செங்கை-அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மணலியில் இந்தத் தொழிற்சாலை இயங்கி வருகிறது. தனியாக ஒரு திட்டத்தை ஏற்படுத்துகின்ற அளவுக்கு இப்போது எந்த யோசனையும் செய்யப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைக் கொண்டு, அதுபற்றிப் பிறகு ஆராயலாம்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புலிக் குன்றம் தொகுதியிலே இதுவரையில் எடுக்கப்பட்டிருக்கிற கல்லின் அளவு எவ்வளவு? இதனால் அங்கே பயன்படுகின்ற தொழிலாளர்கள் எவ்வளவு? இப்போது அது லாபத்தில் இயங்கி வருகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இங்கே கல்லே எடுக்கவில்லை என்று கேள்வி கேட்டார். இப்போது, எவ்வளவு கல் அங்கே எடுக்கப்படுகிறது என்று கேட்கிறார். பொதுவாக செங்கை-அண்ணா மாவட்டத்தில், பரவலாக இந்தக் கற்கள் எடுக்கப்பட்டு, தொழில் நடைபெறுகிறது.

பைபர் பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

* 4507—திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு முதலீட்டில் பைபர் பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை தஞ்சையில் அமைக்க அரசு முன்வருமா?